This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# ஆதலினால் காதல் செய்வீர்

ஒருவர்: ஆச்சிரியம்யா. பஸ் ஸ்டாண்டில ஒரு குதிரை தெளிவா ஒரு வரி பேசித்து.

மற்றவர்: வரிக்குதிரையா இருக்கும்!

– ஜோலார்ப்பேட்டை மோகன்

**சி**ரித்தீர்களா இல்லையா என்பது இந்தக் கதைக்கு முக்கியமல்ல. மேற்குறித்த நகைச்சுவைத் துணுக்கு ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் வந்திருந்ததை நீங்கள் கவனித்திருக்கமாட்டீர்கள். இதன் சிருஷ்டிகர்த்தாவான ஜோலார்பேட்டை மோகன் என்பவன் நம் கநாநாயகன். நண்பர்கள் வட்டாரத்தில் துணுக்கு பிரபலமாகி அவன் பெயர் நாட்பட நாட்படக் குறுகி 'ஜோமோ' என்று நிலைத்துவிட்டதுதான் செய்தி. அப்படி ஒன்றும் பெரிய நண்பர் வட்டாரமில்லை. பார்ஸாரதி ('த்த'கிடையாது–நண்பர்களுக்கு 'மாமா') பூர்ணசந்திரராவ் (அரிஸ்) கிருஷ்ணமூர்த்தி–(கிட்டா) இம்மூவரும்தான் ஜோமோவின் நண்பர் வட்டம்.

அசோக் நகரில் நவீன தேவாலயம் இருக்கிறதே அதற்கு எதிர்க்குறுக்குத் தெருவில் மூன்றாவது வீட்டின் மாடியில் நால்வரும் குடியிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உறவு இல்லை என்று வீட்டுக்கார அம்மாவிடம் சொல்லிவிடாதீர்கள்.

ஜோமோவைப் பற்றிச் சொல்வதற்குமுன் மற்ற மூவருக்கும் தலா ஒரு பாரா. (அவசரக்காரர்கள் மூன்று பாரக்களையும் தள்ளிவிட்டுப் படிக்கலாம். மோசமில்லை ஆனால் ராத்திரி ரேடியோவை அணைத்துவிட்டுக் கொசுபத்தி பற்றவைத்து தூங்குமுன் ஒருமுறை படித்து விடுங்கள். பின்னால் இந்தக் கதையில் நடக்கப் போகும் சிக்கலான சம்பவங்களில் பின்னணியை உக்கிரமாக உணர்ந்து கொள்ள ஹேதுவாக இருக்கும்.)

பார்ஸாரதிதான் குழுவில் கல்யாணமானவன், அதனால்தான் மாமா. மனைவியைக் காட்டித்தான் வீடு வாடகைக் கிடைத்திருக்கிறது. மனைவி நீலா செங்கல்பட்டுக்குப் பத்து கிமீ தூரத்தில் திருமாந்தளூரில் பி.ஜி.எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் படிவத்திற்குத் தமிழ் சொல்லித் தருகிறாள். புலவர் பட்டம் பெற்றவள். தப்பித்தவறி குறுந்தொகை, வேற்றுமைத்தொகை என்று அவளிடம் ஆரம்பித்துவிடாதீர்கள்– நீலா கண்ணாடி போட்டுக் கொண்டு மாவட்ட அளவில் 'கும்பகர்ணன்–சிறந்தவனா? வீடணன் சிறந்தவனா?" என்று பட்டிமன்றத்தில் அதட்டி விவாதித்ததைத் தொலைக்காட்சியில்' 'செய்தி மல'ரில் ஒரு பத்து செகண்டுக்கு மவுனப்படம் போலக் காட்டினார்கள். சொப்பு மாதிரி கப்பும் கொடுத்தார்கள். நீலா சென்னைக்கு மாற்றலுக்கு மனுப் போட்டிருக்கிறாள்.